விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 158 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 12 வியாழக்கிழமை (26.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



## யாழில் பங்கீட்டு முறை மூலம் எரிவாயு விநியோகிக்க நடவடிக்கை

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

எரிவாயு விநியோகம் பங்கீட்டு அட்டைக்குப் பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளரின் கண்காணிப்பின் கீழ் அந்தந்தப் பகுதி முகவர்கள் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் 15

## நிதி அமைச்சு ரணில் வசம்

### ஜனாதிபதி முன்னிலையில் நேற்று பதவிப் பிரமாணம்



(15 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் பலர் வேலை இழப்பர்

### மத்திய வங்கி ஆளுநர் எச்சரிக்கை

(கொழும்பு)

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக எதிர்காலத்தில் பலர் 15

## அவசியமான அரச ஊழியர்களை மட்டும் கடமைக்கு அழைத்தல்

### விசேட சுற்றறிக்கை வெளியீடு

(கொழும்பு)

அரச நிறுவனங்களிலும் அத்தியாவசிய பணியாளர்களை மட்டும் கடமைக்கு அழைக்குமாறு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரச பணியாளர்களை இன்று முதல் 15

### பிரதமராக பதவியேற்க இப்போதும் தயார்

# நெருக்கடியை தீர்க்கும் திறமை, தகைமை உண்டு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



*(கொழும்பு)*

**பிரதமராக பதவியேற்க இப்போதும் தயாராக உள்ளேன் என்று தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் திறமையும் தகைமையும் தன்னிடம் காணப்படுவதாக தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். 15

## தனி நபரின் கடன்சுமை அதிகரிப்பு

(கொழும்பு)

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் மொத்தக் கடன் 525, 200 மில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ள 15

## எரிவாயு விநியோகம்

### இன்றும் நிறுத்தம்


(கொழும்பு)

எரிவாயு சிலிண்டர்கள் இன்றைய தினமும் விநியோகிக்கப்படமாட்டாது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி 12.5 15

## நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சி தொடர்பில்

### பிரித்தானிய உயர்ஸ்தானிகருடன் பிரதமர் ரணில் ஆராய்வு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விற்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கும் இடையிலான சந்திப்பின் 15

### ரூ. 200 மில்லியன் பெறுமதியான

## மருந்து வகைகள் இந்தியாவிலிருந்து நன்கொடை

(கொழும்பு)

25 தொன் அளவிலான மருந்து வகைகள் இந்தியாவிலிருந்து நாளை நாட்டை வந்தடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மருந்து வகைகள் இந்தியாவி 15

### ராஜபக்ஷ அரசிலிருந்து விலகிய

## 10 அரசியல் கட்சிகள் கூட்டணி அமைக்க முடிவு

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திலிருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் 10 பிரதான அரசியல் கட்சிகள் கூட்டணியாக ஒன்றிணைந்து எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட தீர்மானித்துள்ளதாக தேசிய 15

### கொள்கையில்லாததால்

## நிதி உதவி வழங்க முடியாது

### கைவிரித்தது உலகவங்கி

(03 ஆம் பக்கம் பார்க்க)

## பற்றாக்குறையான மருந்து தொடர்பில் ஆவணம் சமர்ப்பிக்குக

### சுகாதார அமைச்சுக்கு ரணில் பணிப்புரை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பற்றாக்குறையாக உள்ள மருந்துகள் தொடர்பான உடனடி ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சுகாதார அமைச்சுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழகத்தின் உதவித் திட்டங்கள்**

# முன்னுரிமை அடிப்படையில் வறிய மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்

## யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்



(யாழ்ப்பாணம்)
இந்தியாவின் தமிழகத்தால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட உதவித் திட்டத்தில் முதற்கட்டமாக சுமார் 20 ஆயிரம் அரிசிப் பொதிகளும் 7500 கிலோ பால்மாவும் கிடைக்கவிருக்கின்றது.

இதனை முன்னுரிமை அடிப்படையில் வறிய மக்களுக்கு பகிர்ந்தளிக்கவிருக்கின்றோம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், பால்மாவைப் பொறுத்தவரையில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சிறு குழந்தைகளை வைத்திருக்கும் குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

இதனைவிட மீனவர்கள் விடுத்த கோரிக்கைக்கிணங்க 15,000 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகிறது.

அது அது மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு குறிப்பாக அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு பகுதி மீனவர்களுக்கு மாத்திரம் பகிர்ந்தளிக்கப்படும்.

இது மீனவர் சங்கங்கள், கடற்றொழில் திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக பகிர்ந்தளிக்கப்படும். சுமார் 705 மீனவர்கள் இந்த நன்மையைப் பெறவுள்ளனர் என்றார்.
(ம-7,18.33)

# கோடரியால் ஒருவர் வெட்டிப் படுகொலை

## குடும்பத் தகராறு காரணமாக அம்பாறையில் விபரீதம்

(அம்பாறை)
அம்பாறை அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள சின்ன முகத்துவாரம் பிரதேசத்தில் குடும்பத் தகராறு காரணமாக பக்கத்து வீட்டு ஆண் ஒருவரை கோடரியால் வெட்டிக் கொலை செய்த சம்பவமொன்று நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னமுகத்துவாரம் அக்கரைப்பற்று 9 பிரிவைச் சேர்ந்த 33 வயதுடைய குணரட்ணம் குணதாஸா என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இரு குடும்பங்களுக்கும் நீண்டகாலமாக குடும்பத் தகராறு காணப்படும் நிலையில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் சம்பவ தினமான நேற்று முன்தினம் இரவு 8.15 மணிக்கு இரு குடும்பத்திற்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அதில் ஒருவர் பக்கத்து வீட்டுக்காரர் மீது கோடரியால் தாக்குதல் மேற்கொண்டுள்ளார்.

இதில் படுகாயமடைந்த குறித்த நபரை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் 36 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் தாக்குதல்மேற்கொண்ட கோடரியுடன் கைது செய்துள்ளனர். (ம-7)

# அரச உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் பரிசீலனை



(கொழும்பு)
அரச சேவையில் தற்போது பணிபுரியும் ஊழியர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான தடைகளை நீக்குவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலின்போது இது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஊழியர்களது தொழிலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென தெரிவித்தார்.

அதனையடுத்தே இது தொடர்பில் பரிசீலிப் பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், அந்நிய செலாவணி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டுமென கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

**தாயின் மரணத்தை மறைத்து**

# இரு மகள்களையும் பரீட்சைக்கு அனுப்பிய தந்தை

(சென்னை)
தாய் இறந்ததை மறைத்து தனது மகள்களை தந்தை, பரீட்சைக்கு எழுத அனுப்பி வைத்த நெகிழ்ச்சி சம்பவம் அனைவரையும் கண் கலங்க வைத்துள்ளது.

தமிழகத்தின் தென்காசி மாவட்டத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தென்காசியின் சங்கரன் கோவிலை சேர்ந்தவர் பெரியசாமி. இவரது மனைவி முத்துமாரி ஆடு மேய்க்கும் தொழிலை செய்து வந்துள்ளார்.

இந்த நிலையில், இரு நாட்களுக்கு முன் முத்துமாரி ஆடுமேய்க்கச் சென்ற போது, கார் மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே பலியானார்.

அதனைத் தொடர்ந்து, தனது மகள்கள் வானீஸ்வரி மற்றும் கலாராணி ஆகியோரிடம் தாய் முத்துமாரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பெரியசாமி கூறியுள்ளார்.

தங்கள் தாய் குணமடைந்துவிடுவார் என்ற நம்பிக்கையில் வானீஸ்வரி - கலாராணி இருவரும் 10ஆம் வகுப்பு பரீட்சை எழுதச் சென்றனர். ஆனால் அவர்கள் பரீட்சை முடிந்து வீடு திரும்பியபோது தாய் இறந்தது தெரியவந்துள்ளது.

இதனால் மாணவிகள் கதறி அழுதனர். அதன் பின்னர் பரீட்சை எழுத வேண்டும் என்பதற்காக தங்கள் தந்தை அவ்வாறு கூறி அனுப்பிவைத்ததை மாணவிகள் அறிந்துள்ளனர். இச்சம்பவம் அப்பகுதியில் இருந்தவர்களை கலங்க வைத்தது. (ம-7)


1ஆம் ஆண்டு நிறைவு
நினைவஞ்சலி



தோற்றம் 08 - 06 - 1985
மறைவு 06 - 06 - 2021

அமரர் கோபாலசிங்கம் மயூரதன்

வானில் மின்னல் மின்னுவதாய்
வாழ்ந்து மறைந்தாய் வாழ்வெல்லாம்
தேனாய் இனித்த அன்புதனைத்
தெவிட்டா தூட்டித் தினம் வாழ்ந்தாய்
ஏனோ இடைமிற் திசைமாறி
இடரே தந்தாய் உனைப் பிரிந்து
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
அகலா துன்றன் நினைவாமே!

தாரிக்கப்பற்று, வதிரி, கரவெட்டி.
தகவல்: குடும்பத்தினர்
(C-4372)

கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 15.04.1940
இறப்பு 23.05.2022

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் திருமதி இரட்ணசிங்கம் செல்வராணி அவர்களின் பாசமிகு தாயார்

அமரர் செல்லையா கனகவல்லியம்மா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ செங்குந்த இந்துக் கல்லூரி
(C 4373)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெளிவான கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும் வரை

# நிதி உதவி வழுங்க முடியாது

# கைவிரித்தது உலக வங்கி

**(வோஷிங்டன்)**
**போதுமான பொருளாதாரக் கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்தும் வரை இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்க எவ்வித திட்டமும் இல்லை என உலக வங்கி அறிவித்துள்ளது.**

இலங்கை தொடர்பான உலக வங்கியின் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.


இலங்கைக்கு உதவுவதற்காக சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய அபிவிருத்தி பங்காளிகளுடன் ஒருங்கிணைத்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கான தெளிவான கொள்கை கட்டமைப்பை இலங்கை வகுக்க வேண்டும் என உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சில நிதித் திட்டங்களை மதிப்பாய்வு செய்துள்ளதாகவும், இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதற்கும் ஏழைகள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## கல்வித்துறையின் செயற்பாடுகள் டிசம்பருக்குள் சீரமைக்கப்படும்

### கல்வி அமைச்சர் சுசில்



(கொழும்பு)
கல்வித்துறையின் செயற்பாடுகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் சீரமைக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

புதிய கல்வி அமைச்சராக நேற்று புதன்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பரீட்சை நடத்துதல், பெறுபேறுகளை வழங்குதல், பாடப் புத்தகங்களை விநியோகித்தல், பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் போன்ற அனைத்து கல்வித் துறையின் செயற்பாடுகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் மீளமைக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான இக்கட்டான பொருளாதார சூழ்நிலையில் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குவதுடன் பிரிவெனா பிரிவின் பணிகளை மீளமைப்பதும் மிகவும் முறையாகவும் துரிதமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-6)

## கோட்டாவுக்கு எதிரான அறிக்கை ஐ.நாவில் சமர்ப்பிப்பு

(ஜெனிவா)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி யஸ்மின் சூகா 43 பக்க அறிக்கையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டிடம் சமர்ப்பித்துள்ளார்.




குறித்த அறிக்கை நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் கோட்டாபயவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி ஒருவருக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது விசாரணை அறிக்கை இதுவாகும்.

18 முன்னாள் இராணுவ அதிகாரிகளை அரச நிர்வாகத்திற்கு நியமித்ததன் மூலம் அரச சேவையை இராணுவ மயமாக்கியதாகவும் கோட்டாபய மீது யஸ்மின் சூகா குற்றம் சுமத்தியுள்ளார் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## அச்சிடப்படும் ஒரு ட்ரில்லியன் ரூபா



(கொழும்பு)
ஒரு ட்ரில்லியன் ரூபா பணம் அச்சிடப்பட வேண்டியிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரூபா வருமானம் கிடையாது என்ற காரணத்தினால் மேலும் ஒரு ட்ரில்லியன் ரூபா பணத்தை அச்சிட நேரிட்டுள்ளது.

மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கும் போது போராட்டங்கள் வெடிப்பது நியாயமானது. எதிர்வரும் ஆகஸ்ட் மாதமளவில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியங்கள் காணப்படுகிறது என அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## 21 ஆவது திருத்த சட்டத்துக்கு வாசுவும் ஆதரவு

(கொழும்பு)
அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு ஆதரவளிக்கப்படும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரட்டை குடியுரிமை உடையவர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதையும் பதவிகள் வகிப்பதையும் தடுக்கும் ஏற்பாடு கட்டாயம் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதிய பிரதமரை தெரிவு செய்த அனுகுமுறையை தமது கட்சி அனுமதிக்காது எனவும், அதனால்தான் அரசில் இணையவில்லை எனவும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார். (நி-6)

## சுப்பர் டீசல், ஒக்டென் 95 பெற்றோலுக்கும் தட்டுப்பாடு

(கொழும்பு)
சுப்பர் டீசல் மற்றும் ஒக்டென் 95 ரக பெற்றோல் சந்தையில் நாளாந்த தேவையை விட 10 சதவீதம் குறைவாகவே காணப்படுவதாக வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறைந்த விலையுடைய பொருட்களுக்கு செயற்கையான கேள்வியை உருவாக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

## சுமார் ஒரு மில்லியன் சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் தேக்கம்

(கொழும்பு)
மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சாரதி அனுமதிப்பத்திரம் அச்சிடுவதற்கான அட்டைகள் இல்லாமை காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

குறிப்பாக சில மாதங்களுக்கு முன்னர், அவுஸ்திரேலியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த 'ஸ்மார்ட்' அட்டைகளுக்கு 6 இலட்சம் யூரோக்கள் செலுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியிடம் பணம் இல்லாமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கிரிக்கெட் சம்பியன்ஸ் யாழ்.சென்றல் 1 ஆவது வெற்றி



AB விளையாட்டுக் கழகம் நடாத்தும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட தொடரின் 4 ஆவது போட்டியில் யாழ். சென்றல் அணி, ஓல்ட்கோல்ஸ் அணியை 2 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

ஓல்ட் கோல்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்ட போது 38.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களைப் பெற்றது.


மதூஸன்-59, நிமலேந்திரா-31, நிரோஸன்-24, சிறிகுகன்-29, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ். சென்றல் அணியைச் சார்ந்த சுபாதீஸ்-01, காலெல்-02, மதூஸன்-03, செந்தூரன்-01 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 49.2 ஓவர்களில் 08 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

காலெல்-57, மில்லர்-45, நிரோஸன்-39 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஓல்ட்கோ ல்ஸ் அணியைச் சார்ந்த நின்துஸன்-03, கஜேந்தி ரன்-01, நிரோஸன், நிமலேந்திரா, சிறிகுகன் தலா-01 விக்கெட்டினை கைப்பற்றினர். (4)

# ஐ.பி.எல். 2022 இறுதிப் போட்டிக்குள் குஜராத் டைட்டன்ஸ்



2022 ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு முதலாவது அணியாக, குஜராத் டைட்டன்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

இராஜஸ்தான் றோயல்ஸ் அணியுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற முதலாவது தகுதிகாண் போட்டியில், குஜராத் டைட்டன்ஸ் அணி, 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர், 189 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலளித்தாடிய குஜராத் டைட்டன்ஸ் அணி, 19.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்த நிலையில், 191 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. (4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2625

### சந்துரு

மக்கள் என்று தான் வாழ இனி
வழியேயில்லை என்று
உணர்கிறார்களே அன்று
புரட்சி வெடிக்கும் அந்த மக்கள்
பிரளயத்திற்கு முன்னால்
அதிகாரவர்க்கம் சிதறிபோகும்



புரட்சியாளர்
லெனின்

### மேனகா

சந்தனக்கட்டை இழைக்க இழைக்க
மெலியுமே தவிர எந்த நிலையிலும் தன்
நறுமணத்தை இழப்பதில்லை...!



அதுபோல் நல்லவர்கள் சில விடயங்களில்
தோற்றாலும் தமது உறுதியை
இழப்பதில்லை...!

### ரஞ்சன்



உலகில் விலை
உயர்ந்த திரவம்
கண்ணீர் !!
அதில் 1% நீரும்
99%
உணர்வு களும்
கலந்திருக்கு

### சுகந்தி


தேடும் அன்பை விட
தேடி வரும் அன்பை நேசி
அதில் அழகு இல்லாமல்
இருக்கலாம்
அன்பு நிச்சயம் இருக்கும்....

### பிரவீன்



சிரிக்காத நாளெல்லாம்
வீணான நாட்களே!
-சார்லி சாப்ளின்-

### றாயினி



ஆண்களையும் கோலம்
போட வைத்த பெருமை
ஆண்டராய்டு ஃபோனையே சாரும்!!!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார துறைக்கு 2 மில்லியன் டொலர்கள் நன்கொடை வழங்கிய இலங்கை கிரிக்கெட் நிறுவனம்

(கொழும்பு)

அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு நாட்டின் சுகாதாரத்துறைக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்க இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, குழந்தைகளுக்கான சிறுவர் பராமரிப்புக்கு தேவையான அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 'குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனைக்கு' 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கியுள்ளது.

அத்தோடு, புற்றுநோயாளிகளின் சிகிச்சைக்காக அத்தியாவசிய மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 'தேசிய புற்றுநோய் மருத்துவமனை'க்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கவுள்ளது.

நாட்டிற்கு தேவைப்படும் இந்த தருணத்தில் இந்த நன்கொடையை வழங்குவதில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. மேலும் இந்த சவாலான காலகட்டத்தை முறியடிக்க எமது தேசத்திற்கு எமது பூரண ஆதரவை வழங்குவோம் என இலங்கை கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா கிரிக்கட் மற்றும் எமது வீரர்களுக்கு எப்பொழுதும் நிபந்தனையின்றி ஆதரவளித்து வரும் எமது மக்களுக்கு உதவ முன்வருவது ஒரு சிறந்த விளையாட்டு வர்த்தக நாமமாக நாம் கருதுகின்றோம் என இலங்கையின் செயலாளர் மொஹான் டி சில்வா தெரிவித்தார். (நி-6)

## அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளில் இலங்கைக்கு மூன்றாமிடம்

(கொழும்பு)

உலகில் அதிக பணவீக்கம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை மூன்றாவது இடத்திற்கு பட்டியலிடப்பட்டுள்ளது.

உலக பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹென்கியின் மாதாந்த பணவீக்க சுட்டெண் அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய முதலாவது இடத்தில் சிம்பாப்வே, இரண்டாவது இடத்தில் லெபனான் மூன்றாவது இடத்தில் இலங்கை வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை இரண்டாம் இடத்தில் அதிக பணவீக்கம் கொண்ட நாடாக பெயரிடப்பட்டிருந்த நிலையில், தற்போது மூன்றாம் இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராகப் போராட்டம்

(கொழும்பு)

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதி



மன்றத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டம் காலிமுகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டக்காரர்களால் முன்னெடுக்கப்பட்டது. (நி-6)

## விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளை துரிதமாக வழங்க நடவடிக்கை

### விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

நெற்செய்கைக்கு தேவையான எரிபொருளை விவசாயிகளுக்கு துரிதமாக வழங்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய தெரிவு செய்யப்பட்ட 217 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்கப்படும்.

இந்த வேலைத்திட்டம் தொடர்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், இம்முறை பயிர்ச்செய்கைக்கு மேலதிக எரிபொருளை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய பணிப்பாளர் நாயகம் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பட்டியலை விவசாய அமைச்சரிடம் கையளித்ததையடுத்து, அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளை தொடர்ந்தும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2022 யால பருவம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதுடன், நாட்டின் அனைத்து விவசாயப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் அனைவருக்கும் எரிபொருள் கிடைக்காததால் கடும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கமநல சேவை நிலையங்களின் அனுமதி கடிதத்தை அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சமர்ப்பித்து விவசாயிகள் தமது ஒவ்வொரு நெற்பயிர்களுக்கும் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-6)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 19 • 07 • 1962

மறைவு 20 • 05 • 2022



**அமரர்.திரு. F.X.அன்ரன்**

(நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர்)

நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அமரர். F.X.அன்ரன் அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(11606)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயம், ஆனைக்கோட்டை.

## இராசிபலன்

26.05.2022
வைகாசி 12, வியாழக்கிழமை
ஏகாதசி பிற்பகல் 2.04 மணிவரை
ரேவதி பின்னிரவு 3.13 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம் -பூசம்

வளவன்



**மேஷம்** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்க முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும்.



**துலாம்** உடல் நலன் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், கௌரவமான நாள்.



**மகரம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.



**ரிஷபம்** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



**சிம்மம்** எதிர்பாராத வகையில் சில முரண்டுபாடுகள் தோன்றி மறையும், நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.



**விருச்சிகம்** இல்லத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பூர்வீகச் சொத்துக்களால் நம்மையுண்டு.



**கும்பம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம்.



**மிதுனம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அரசு வழியில் அனுகூலமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.



**கன்னி** விரும்பிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்.



**தனுசு** தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீதான பாசம் கூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடும் எண்ணம் உருவாகும்.



**மீனம்** நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

சந்திப்புகளும் பிரிவுகளும் நிறைந்ததே வாழ்க்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் சேதன பசளை மூலமான மஞ்சள் செய்கை வெற்றி

(குப்பிழான்)

**வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மஞ்சள் அறுவடை வயல்விழா நேற்றுப் புதன்கிழமை திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் யாழ்.மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி.அ.சிறிரங்கன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.**

குறித்த விழாவில் முற்று முழுதாக சேதனப் பசளை மூலம் ஒன்பது மாத காலத்திற்குள் விளைவிக்கப்பட்ட மஞ்சள் அறுவடையைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அ.சிவபாலசுந்தரன் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.



திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட மஞ்சள் செய்கை வெற்றியளித்துள்ளதாகவும், இம்முறையும் அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளதாகவும் துறைசார் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து மஞ்சள் நடுகை தொடர்பான செயல்முறை விளக்கமும், மஞ்சள் பதப்படுத்தல் தொடர்பான செயல்முறை விளக்கமும் துறைசார் அதிகாரிகள், உத்தியோகத்தர்களால் நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகள் மற்றும் ஆர்வலர்களுக்கு வழங்கப்பட்டது. (4-6-18)

# வெசாக் தினத்தில் மதுபானம் விற்க முயன்றவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

வெசாக் பண்டிகை தினத்தில் விற்பனை நோக்கில் சாராயம் மற்றும் பியர் ஆகியவற்றை பதுக்கி வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

வெசாக் தினத்தன்று கைதடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 180 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 150 சாராய போத்தல்கள் மற்றும் 500 மில்லி லீற்றர் கொள்ளளவுடைய 168 பியர்ரின்களை சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினர் மீட்டதுடன் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்திருந்தனர்.

கைதான குறித்த சந்தேக நபருக்கு கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-6-30)

# கசிப்புடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடிகாமம் பொலிஸ் நிலைய புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் 20 லீற்றர் கசிப்பு, மோட்டார் சைக்கிள் ஆகியவற்றை மீட்டதுடன் 30 வயதான சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

கைதான நபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

# இலவச யோகா தியான பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் முதல் தடவையாக இந்தியாவில் தென் கயிலை உலக சமாதான ஆலயத்தின் மூலம் இலவச யோக தியானப் பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

குறித்த நிகழ்வு நாளை 27 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை கலாமுற்றம் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் அரங்கில்) இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இடத்தில் காலை 7 மணி முதல் மாலை 6.30 வரை நடைபெறவுள்ளது.

குறித்த பயிற்சிகள் இந்தியா. உலக சமாதான அறக்கட்டளை பொதுச் செயலாளர் மெய்ஞானாசிரியர் கே.எஸ். சுந்தரராமனால் வழங்கப்படவுள்ளது.

மேலதிக தவல்களுக்கு 021 221 1209, 077 760 7026 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (4-6)

# சாவகச்சேரியில் விபத்து ஒருவர் மருத்துவமனையில்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார மருத்துவமனை முன்பாக ஏ9 வீதியில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ9 வீதியால் பயணித்த டிப்பர் வாகனம் மோட்டார் சைக்கிளை மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(4-6-30)

# பழைய மாணவர் ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

யா/நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடலும் மதிய போசன விருந்தும் எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி சனிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4-6)



மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தொடர்பிலான சமூக விழிப்புணர்வை உருவாக்குவது பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையமும் கைச்சாத்திட்டுள்ளன.

(படம்: சிவசாந்தன், ரவிசாந்)





யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறிய தாதியர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும், சத்தியப்பிரமாணம் ஏற்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி திருமதி. தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன். யாழ்ப்பாண தாதிய பயிற்சிக்கல்லூரி அதிபர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு தாதியர் சின்னங்களை அணிவித்தனர். (படங்கள்: சிவசாந்தன்)

# வீதியில் கண்டெடுக்கப்பட்ட நான்கு பவுண் நகை

## உரியவர்களிடம் ஒப்படைப்பு

(சாவகச்சேரி)

வீதியில் கண்டெடுத்த சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான 4 பவுண் நகையை சாவகச்சேரி பிரதேசசபை சாரதி நடேசன் உரியவர்களிடம் கையளித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது நேற்று புதன்கிழமை காலை சாவகச்சேரி பிரதேச சபையின் சாரதி கொடிகாம நகர் பகுதியில் 4 பவுண் நெக்கிளஸ் ஒன்றினை கண்டெடுத்தார்.

இந்நிலையில் குறித்த தகவலை அவ்விடத்தில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு தெரியப்படுத்தி விட்டு பிரதேச சபை செயலாளரிடம் நகையினை ஒப்படைத்தார்.

சிறிது நேரத்தில் நகையை தவற விட்டவர்கள் தகவல் அறிந்து உரிய ஆதாரத்தை காட்டி நகையை பெற்றுச் சென்றார்.

பிரதேச சபை சாரதியின் முன்மாதிரியான செயற்பாட்டினை பலரும் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான பயணத்தடைகளை நீக்குங்கள்

## சுற்றுலாத்துறை அமைச்சர் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு தற்போது விதிக்கப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளை நீக்குமாறு அந்தந்த நாடுகளை வலியுறுத்தும் முயற்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, இராஜதந்திர சமூகத்தை சந்தித்துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துள்ளது. பல நாடுகள் தமது பிரஜைகள் இலங்கைக்கு வருவதைத் தடுக்கும் வகையில் பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

"இலங்கையில் சுற்றுலாத்துறையை மீண்டும் புத்துயிர் பெற வைப்பது தொடர்பாக கொழும்பில் உள்ள இராஜதந்திர சமூகத்தை சந்தித்தோம். தற்போது பல நாடுகளால் விதிக்கப்பட்டுள்ள பயணத் தடைகளை நீக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளோம்" என புதிய சுற்றுலா அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ டுவிட் செய்துள்ளார்.

இலங்கை சுற்றுலா ஆலோசனைக் குழுவின் தலைவர் ஹிரான் குரே இந்த சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளார். (நி)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் முக்கிய சூத்திரதாரிகளுக்கு பிணை

(கொழும்பு)

மொஹமட் இல்ஹாம் மற்றும் மொஹமட் இன்ஷாப் ஆகியோரின் தந்தை மற்றும் சகோதரர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கோட்டை நீதவான் நவரத்ன மாரசிங்கவினால் இந்த உத்தரவு நேற்று புதன்கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் இருவரும் தலா 200,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் தலா 1 மில்லியன் ரூபாய் பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டதுடன், அவர்களது கடவுச்சீட்டுகளை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. அத்தோடு மாதத்தின் முதல் மற்றும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு அன்று கொழும்பில் உள்ள இரு பிரபல ஹொட்டல்களில் மொஹமட் இல்ஹாம் மற்றும் மொஹமட் இன்ஷாப் பயங்கரவாத தாக்குதலை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# 140 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் கைது

(பதுளை)

பதுளை - ஹாலி எல பகுதியில் 140 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுவர பகுதியிலுள்ள வீதித்தடையில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சட்டவிரோதமான முறையில் பெற்றோலை கொண்டுசென்ற முச்சக்கர வண்டி சாரதியான 41 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (நி-6)

# பேருந்து-கனரக வாகனம் மோதி விபத்து - 6 பேர் காயம்



(திருமலை)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி திருகோணமலை பிரதான வீதி தம்பலகாமம் சந்தியை அண்மித்த சுவாமிமலை பிள்ளையார் கோயிலுக்கு முன்னால் வாகன விபத்தொன்று நேற்று புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றும் கனரக வாகனமும் மோதியதில் அறுவர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். இவ் விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 3
கி.பா: 15 சூரி 5 செவ் 6 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:HNDA கிளை முகாமையாளர் (தனியார்)
எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்
தொ.இ: B/9921

பிறப்பு: 1986 கிறிஸ்தவம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: வியாபாரம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/9923

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூராடம் 2
கி.பா: சூரி, செவ் 6
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L பூசகர்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/9925

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம் : ஆயிலியம்
கி.பா: சூரி 4 செவ் 5 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: NCT, QS கட்டட ஒப்பந்தகாரர்
எதிர்பார்ப்பு : அரச தொழில்
தொ.இ: B/9927

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூனர்பூசம் 2
கி.பா: 101 சூரி 8 செவ் 7 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் சைவ போசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ:G/9908

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 42 சூரி 12 செவ் 10 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: BSc (Pera), MSc, MBA Computer Engineer
எதிர்பார்ப்பு: சைவ போசனம் Professional Qualified
தொ.இ:G/9914

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரோகினி 1
கி.பா: 26 சூரி, செவ் 7 இல் உயரம் : 5'1"
தகைமை/தொழில்: ஆங்கில ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ:G/9915

பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: சூரி.செவ் 4 இல்
உயரம்:5'6" தகைமை/தொழில்:BA, MA, Ass. Lecturer
எதிர்பார்ப்பு: உயர் பதவி தீவுப் பகுதி வேண்டாம்
தொ.இ:G/9917

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# நாடளாவிய ரீதியில் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளன

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பல்வேறு போராட்டங்கள் மற்றும் அமைதியின்மை காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாவுதுன்ன தெரிவித்துள்ளார். அந்த நிரப்பு நிலையங்களில் முன் பதிவு செய்யப்பட்ட அனைத்து எரிபொருள் கையிருப்புகளும் இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# சட்டவிரோதமாக எரிபொருள் விற்பனை இதுவரை 137 பேர் கைது

(கொழும்பு)

அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமாக எரிபொருளை பதுக்கி வைத்திருந்த 137 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட 429 சுற்றிவளைப்புகளில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சந்தேகநபர்களிடம் இருந்து 27 ஆயிரம் லீற்றர் பெற்றோ2லும், 22 ஆயிரம் லீற்றர் டீசலும் மற்றும் 10 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய்யும் கைப் பற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-6)

# புதிய அரசாங்கம் இதுவரை எதுவும் செய்யவில்லை

## சனத் ஜெயசூரிய

(கொழும்பு)

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்து செய்ய வேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேஸ்புக்கில் பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர், 20ஆவது திருத்தத்தை நீக்குவது அரசாங்கத்தின் நேர்மைத் தன்மையை அறிந்துகொள்ள பயன்படும்.

மேலும், புதிய அரசாங்கம் பதவியேற்று இரண்டு வாரங்கள் கடந்த போதிலும் உறுதியான எதுவும் இடம் பெறவில்லை என்பது கவலையளிப்பதாகவும் ஜயசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

"எங்கள் மக்கள் இன்னும் வரிசையில் நிற்கிறார்கள். அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன். தயவு செய்து மக்களின் துன்பங்களை மறந்துவிடாதீர்கள்," என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 55

# ஒரு போர் வீரனின் பதற்றம் தோல்விக்கான வழியாகும்





உலகத்தையே ஜெயிக்க நினைத்த பிரான்ஸ் மாவீரன் நெப்போலியன் கடைசிக் காலத்தில் பிரிட்டனிடம் தோல்வி அடைந்த போது அவரை பிரிட்டிஷ் இராணுவம் சிறைபிடித்து

ஆபிரிக்க தனிச்சிறையில் தனிமையில் வைத்தது. சிறையில் மன உளைச்சலில் அவரின் கடைசிக் காலம் கழிந்தது. அவரைப் பார்க்க வந்த அவரின் நண்பர் ஒருவர் அவரிடம் ஒரு சதுரங்க அட்டையை கொடுத்து "இது உங்களின் சிந்தனையை செயற்பட வைக்கும் தனிமையைப் போக்கும்". என்று கூறி அவரிடம் கொடுத்தார்.

ஆனால் சிறைப்படுத்தி விட்டார்களே என்ற மன உளைச்சலில் இருந்த மாவீரன் நெப்போலியனுக்கு சிந்தனை செயற்படாமல் இருந்ததுடன் நண்பர் கொடுத்த சதுரங்க அட்டை மீது கவனம் போகவில்லை. சிறிது காலத்தில் அவர் இறந்து போனார். பிற்காலத்தில் பிரான்ஸ் அருங்காட்சியகம் மாவீரன் நெப்போலியனிடம் இருந்த சதுரங்க அட்டையை ஏலம் விட அதை ஆய்வு செய்த போது அந்த அட்டையின் நடுப்பக்கத்தில் சிறிய அளவில் ஒரு குறிப்பு இருந்தது. அதில் அந்த சிறைச்சாலையில் இருந்து தப்பிப்பதற்கான வழியை அந்த குறிப்பு சொல்லி இருந்தது.

ஆனால் அவரின் மன உளைச்சலும்,பதற்றமும் அவரின் சிந்தனையை செயற்படாமல் ஆக்கி வைத்து அவரின் தப்பிக்கும் வழியை மூடி மறைத்தது.

அதைப் போல் உறுதியான சிமெண்ட் தரையையும் மரப்பெட்டியையும் தன் கூர்மையான பற்களாலும் நகத்தாலும் குடைந்து ஓட்டை போடும் எலி, அதே மரத்தால் செய்யப்பட்ட எலிப்பொறியில் சிக்கிக் கொண்டால் அதற்கு ஏற்படும் மன உளைச்சலாலும் பதற்றத்தாலும் அந்த எலி பொறியை உடைக்கும் வழியை விட்டு விட்டு அந்த பொறியின் பின்னால் இருக்கும் கம்பிக்கு முன்னாலும் பின்னாலும் பதற்றத்துடன் சென்று சிந்தனை செய்யாமல் மனிதர்களிடம் மாட்டிக்கொண்டு விடும்.

மாவீரனுக்கும் சரி.. சாதாரண எலிக்கும் சரி... பதற்றமும் மன உளைச்சலும் அவர்களின் சிந்தனையை செயற்படாமல் வைத்து முன்னேற்றத்திற்கான வழியை அடைத்து விடுகிறது...

மனிதனுடைய பல பிரச்சனைகளுக்கு காரணம், மனஉளைச்சல் தான்!

**அன்பு வாசகர்களே!**
**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# தாய்வான் மீது ...

## அமெரி...



(பீஜிங்)

**தேவை ஏற்பட்டா... என சீன ஜனாதிபதி...**

ஜப்பானில்நடந்து வரும்குவாட் அமைப்பு மாநாட்டில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தாய்வான் மீது படையெடுத்தால் சீனாவுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் களம் இறங்கும் என ... விடுத்... திபதி... தா... கிளை...

# ஆரம்பப் பாடசாலையில் துப்பாக்கிச்சூடு

## 18 மாணவர்கள் உட்பட 21 பேர் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 18 மாணவர்கள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

18 வயதுடைய ஒருவரால் குறித்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது என்று அம் மாநில ஆளுநர் கிரெக் அபோட் தெரிவித்துள்ளார்.

13 குழந்தைகள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பல தசாப்தங்களாக அமெரிக்கா முழுவதும் துப்பாக்கி வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன.

குறிப்பாக 2020 ஆம் ஆண்டில் 19,350 பேர் உயிரிழந்துள்ளதோடு இந்த ஆண்டு இதுவரை 212 பாரிய துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (நி-6)

உல... மீ...



(... எத... முன்... அதா... பின் ... யாக... ளார். ... டெ... த்து ய... அவர் ... வராகி... களுக்... வார் ... உ...

# அட்லாண்டிக் பெருங்கடலில் பாரிய சூறாவளிகள் தேசிய பெருங்கடல் வளிமண்டல மையம் எச்சரிக்கை

உலகை தற்போது ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் காலநிலை மாற்றங்களினால் பல்வேறு அசௌகரியங்கள் நிகழ்ந்து கொண்டிருப்பதை காண முடிகின்றது.

இந்த நிலையில் வருகின்ற யூன் 1 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரையான காலப் பகுதியில் அட்லாண்டிக் பெருங்கடற்பரப்பில் பாரிய சுமார் இருபதிற்கும் மேற்பட்ட சூறாவளிப் புயல்கள் ஏற்படலாம் என தேசிய பெருங்கடல் மற்றும் வளிமண்டல மையம் தெரிவித்துள்ளது.

மேற்படி சூறாவளிப் புயல்கள் வழமை போன்றவையல்லாமல் மிகவும் ஆக்ரோஷத்துடனும் பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் தன்மைகளையும் கொண்டிருக்கும் வாய்ப்புக்கள் காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மாறிவரும் காலநிலை, மேற்படி அட்லாண்டிக் பெருங்கடற் பரப்புக்களிலும் அதிகளவான தாக்கத்தை செலுத்தும் எனவும், இந்த தாக்கம் ஏனைய கடல் எல்லைகளையும் தாக்கும் அபாயங்கள் தென்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது. (நி-6)

# கோதுமை ஏற்றுமதிக்கான தடையை நீக்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை

(வோஷிங்டன்)

கோதுமையின் ஏற்றுமதி மீதான தடையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என இந்தியாவிடம் சர்வதேச நாணய நிதியம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதன் மூலம் சர்வதேச உணவுப் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இந்தியா பங்காற்ற முடியும் எனவும் தெரிவித்துள்ளது.

135 கோடி மக்களுக்கு உணவளிக்க வேண்டி இந்தியா எடுத்த இந்த முடிவை பாராட்டுவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும் ஏற்றுமதி தடையை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நீக்குமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-6)

... இ...

(... ர... ந்தி... னது ... டிருக்... நிலை... றாம்... தொ... சாத்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# து படையெடுக்க தயங்க மாட்டோம்

## மரிக்காவுக்கு சீனா பதிலடி



**ற்பட்டால் தாய்வான் மீது இராணுவ பலத்தை பயன்படுத்த தயங்க மாட்டோம் னாதிபதி ஜீ ஜின்பிங் பகிரங்கமாகத் தெரிவித்தார்.**


என நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், சீன ஜனாதிபதியின் பதில் வெளிவந்துள்ளது.

தாய்வான் தங்கள் நாட்டின் ஒருங்கிணைந்த பகுதி என சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது.

தாய்வானை அச்சுறுத்தும் விதமாக அந்நாட்டு வான் எல்லைக்குள் சீன போர் விமானங்கள் அத்துமீறி நுழைந்து வருவதுடன், தென்சீனக் கடல் பகுதியில் சீனா போர்ப்பயிற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், தாய்வான் மீது தாக்குதல் நடத்த தமது இராணுவம் தயாராக வுள்ளது என்று, சீன ஜனாதிபதி வெளியிட்ட குரல் பதிவு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உலக சுகாதார அமைப்பின் தலைவராக மீண்டும் டெட்ரோரஸ் அதானோம்



(ஜெனிவா)

எத்தியோப்பியாவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சரான டெட்ரோரஸ் அதானோம் உலக சுகாதார அமைப்பின் தலைவராக 2 ஆவது முறையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டெட்ரோரஸ் அதானோமை எதிர்த்து யாரும் போட்டியிடாத நிலையில், அவர் மீண்டும் இந்த அமைப்பின் தலைவராகியுள்ளதுடன், அடுத்த 5 ஆண்டுகளுக்கு அவர் தலைவராக செயற்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக சுகாதார அமைப்பின் தலைவராக மீண்டும் தேர்வாகியுள்ள டெட்ரோரஸ் அதானோமுக்கு அமெரிக்கா, ஜேர்மனி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

கொரோனா வைரஸ் தொற்றின் போது பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் உலக நாடுகளின் கேள்விகளுக்கு பதிலளித்து உலக சுகாதார அமைப்பை டெட்ரோரஸ் திறம்பட வழிநடத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அடுத்தடுத்து மூன்று ஏவுகணைகளை ஏவி பரிசோதித்த வடகொரியா

(பியாங்யாங்)

வட கொரியா நேற்று புதன் கிழமை அதிகாலை அதன் கிழக்கு கடற்கரையில் மூன்று பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியதாக தென் கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது முதல் ஆசியப் பயணத்தை நேற்று முன்தினம் முடித்துக் கொண்டு வெளியேறிய மறுநாள் இந்தச் சோதனை இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தென் கொரியா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்யும் நேரத்தில் வட கொரியா அணு ஆயுதச் சோதனை நடத்தலாம் என முன்னரே எச்சரிக்கப்பட்டு இருந்தது.

எனினும் அவரது ஆசியப் பயணம் முடிவடைந்து புறப்பட்ட மறுநாள் 3 ஏவுகணைகளை அடுத்தடுத்து ஏவி வட



கொரியா சோதனை நடத்தியுள்ளது.

தென் கொரியாவுக்கு விஜயம் செய்த அமெரிக்க ஜனாதிபதி, வட கொரியாவின் தொடர் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள ஏதுவாக தென் கொரியா - அமெரிக்கா இடையிலான கூட்டு இராணுவ பயிற்சிகளை விரிவாக்குவது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து தென் கொரிய ஜனாதிபதியுடன் பேசினார். இது வட கொரியாவை ஆத்திரமடையச் செய்துள்ளது.

நீண்டகாலமாக செயலற்ற நிலையில் இருந்த அணு உலையில் கட்டுமானத்தையும் வட கொரியா மீண்டும் தொடங்கி உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மூன்றாம் உலகப்போரின் ஆரம்ப கர்த்தா ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்யா உக்ரைன் மீது தொடர்ந்திருக்கும் ஆக்கிர மிப்பு போரானது முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த முரண்பட்ட சூழ்நிலையானது நிச்சயமாக மூன்றாம் உலகப் போருக்கான ஒரு தொடக்கப் புள்ளியாக அமையும் சாத்தியக் கூறுகள் அதிகமாக தென்படுவதாக ஹங்கேரியை பிறப்பிடமாகக் கொண்ட வரும் முன்னனி பணக்காரர்களில் ஒருவரும் பொருளாதார நிபுணருமான ஜோர்ஜ் சோரோஸ் தெரிவித்தார்.

டாவோ நகரில் நடைபெறும் உலகப் பொருளாதார அமர்வில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மூன்றாம் உலக யுத்தம் ஒன்று ஆரம்பமாகும் எனில் நிச்சயம் அதற்கு ரஷ்ய ஜனாதிபதி புடினே பதில் கூற வேண்டும் எனவும், மேலும் சீனாவும் ரஷ்யாவும் சமூகத்தில் எப்போதும்



தீவிரவாதத்தை விதைக்கும் நாடுகள் என்பது தெளிவாக உணரப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு, வவுனியாவில்

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில்

# பெருமளவு எரிபொருள் மீட்பு

(முல்லைத்தீவு)

**பாரிய எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் இக்காலகட்டத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் வவுனியாவில் 910 லீற்றர் டீசலும் முல்லைத்தீவில் 900 லீற்றர் மண்ணெண்ணெய்யும் மீட்கப்பட்டுள்ளன.**



முல்லைத்தீவிற்கு கடந்த 15 நாட்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் வருகை தராத நிலைமை காணப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான பின்னணியில் முள்ளியவளை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு அருகாமையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் பதுக்கி வைத்திருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட விலை கட்டுப்பாட்டு பிரிவினருக்கு தகவல் கிடைத்த நிலையில் நேற்று முன்தினம் குறித்த இடத்திற்குச் சென்ற விலைக்கட்டுப்பாட்டு பிரிவின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பதிகாரி கே.ரி.வசந்தசேகரன் தலைமையிலான அணியினர் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 900 லீற்றர் மண்ணெண்ணெய் பதுக்கி வைக்கப்பட்டு இருந்ததை அடையாளம் கண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த 900 லீற்றர் மண்ணெண்ணையினை குறித்த பகுதிக்கு வருகை தந்த மக்களுக்கு குடும்ப பங்கீட்டு அட்டைக்கு ஏற்ற வகையிலே ஒவ்வொருவருக்கும் மண்ணெண்ணை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளை வவுனியா புளியங்குளம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்ட 910 லீற்றர் டீசல் நேற்று முன்தினம் புளியங் குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-6-281-299)

## உறவுகளைத்தேடிய 115 பேர் உயிரிழப்பு

(நெளுக்குளம்)

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்களது உறவுகள் அவர்களின் விடுதலையை வலியுறுத்தி பல்வேறு போராட்டங்களையும் நீண்டகாலமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடியலைந்து சொல்லெண்ணா துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து வயோதிப ஓய்வு காலங்களில் நோய்வாய்பட்டு மருத்துவமனைகளிலும் ஏனைய உறவுகளின் பாதுகாப்பிலும் இருந்து வருகின்றனர்.

இவ்வாறு தமது உறவுகளை தேடியலைந்து 115 உறவுகள் நோயினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். வவுனியா மாவட்டத்தில் 15 பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக உறவுகள் தெரிவித்துள்ளனர்.(4-6-299)

## திருத்த வேலைக்காக குமுதினிப்படகு வல்வெட்டித்துறை நோக்கி சென்றது

(கண்டாவளை)

நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்துக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பயன் படுத்தப்பட்டு பழுதடைந்த வந்த நிலையில் மாவிலித்துறையிலும் குறிகாட்டுவானிலும் மாறி மாறி நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குமுதினிப் படகு திருத்த வேலைகளுக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நெடுந்தீவு குறிகாட்டுவானுக்கான கடல் போக்கு வரத்துக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த குமுதினிப் படகு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக பழுதடைந்த நிலையில் நெடுந்தீவு மாவிலித் துறையிலும் அதன் பின்னர் குறிகாட்டுவானிலுமாக நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பழுதடைந்து திருத்தப்பணிகள் முன்னெடுக்கப்படாது இழுபறியில் கிடந்த குமுதினி படகு திருத்த வேலைகளுக்காக நேற்று வல்வெட்டித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. (4-6-315)



இலங்கை சிவபூமி அறக்கட்டளையினால் தெல்லிப்பழை புற்றுநோயாளர் மருத்துவ பிரிவுக்கு அவசிய தேவையான மருந்தில் ஒரு பகுதியை புற்றுநோய் மருத்துவ நிபுணர். கிருசாந்தி ராஜசூரியரிடம் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் நேற்று கையளித்தார்.

## மண்ணெண்ணெய் தட்டுப்பாடு

# மீன்பிடித்தொழில் முற்றாக பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீன்பிடி தொழிலை வாழ்வாதாரமாக நம்பியுள்ள மக்கள் தற்போது தொழிலுக்கு செல்வதற்கு மண்ணெண்ணெய் இல்லாததால் பாரிய சிக்கல்களை எதிர் நோக்குகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை முதல் கொக்குளாய் வரையான கடற்பரப்பில் 2000 மீன்பிடிப் படகுகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகத்திற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் மண்ணெண்ணெய் சுமார் 18 நாட்களுக்கு மேலாக கிடைக்காததன் காரணமாக தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனை விடவும் தாங்கள் குறுகிய கடற்பரப்பிலேயே தொழில் செய்யக்கூடிய நிலைமை இருந்த போதும் தற்போது அங்கு சட்டவிரோதமாக கூட்டு வலை மற்றும் வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தல் டைனமற் பாவித்து மீன் பிடித்தல் போன்ற சட்டவிரோத தொழில்கள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக தங்களுடைய தொழிலை செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது. அதிக தூரம் சென்று மீன் பிடிக்க வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

அதற்கு தற்போது எரிபொருள் இல்லாதது மிகப் பாரிய சவாலாக உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

சட்டவிரோத தொழில்களை நிறுத்தி தருமாறு பல்வேறு தடவைகளாக மாவட்ட செயலகம், கடற்தொழில் நீரியல் வள திணைக்களம் உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களிடம் கேட்ட போதும் இதுவரை எந்த வித தீர்வும் இல்லாமையால் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதாகவும் உடனடியாக அரசு இந்த சட்டவிரோத தொழில்களை நிறுத்தி தமக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழி சமைக்க வேண்டும்.

இது நடைபெறாத பட்சத்தில் நாளை முல்லைத்தீவு மாவட்டத்தில் பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (4-6-281)

## திருச்சி சிறப்பு முகாம்

### ஈழத்தமிழர்களை விடுவிக்கக்கோரி

### மாந்தை கிழ.பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றம்



(பனிக்கன்குளம்)

உண்ணாவிரத போராட்டத்தை தொடரும் திருச்சி சிறப்பு முகாம் ஈழத்தமிழ் உறவுகளை விரைவில் விடுவிக்கக்கோரி மாந்தை கிழக்கு பிரதேச சபையில் தீர்மானம் ஒன்று நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் அதன் மாநாட்டு மண்டபத்தில் தவிசாளர் ம.தயாநந்தன் தலைமையில் இடம்பெற்றபோதே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (4-6-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான போசாக்கு குறைபாடு

## ஏற்படும் அபாயம் மருத்துவர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**நாட்டில் கடுமையான போசாக்கு குறைபாடு ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க சம்மேளன கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்களின் தொழிற்சங்க சம்மேளன கூட்டமைப்பின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான விலையேற்றம் ஆகியனவற்றின் அடிப்படையில் நோக்குமிடத்து நாட்டில் கடுமையான போசாக்கு குறைபாடு ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். மேலும் கர்ப்பிணி பெண்கள், தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள், சிறு குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் தற்போதும் ஊட்டச்சத்து குறைப்பாடு அதிகரித்த போக்கு காணப்படுகிறது.

இந்த நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு நாட்டில் மீண்டும் திரிபோஷா சத்துண வினை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மருத்துவர் வலியுறுத்தினார். (நி-6)

# ஆறு வாரங்களுக்குள் இடைக்கால வரவு-செலவுத் திட்டம்

## பிரதமர் ரணில் உறுதி

(கொழும்பு)

ஆறு வாரங்களுக்குள் இடைக்கால வரவு-செலவு திட்டத்தை தாக்கல் செய்யவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். அந்த வகையில் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டில் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு உதவ நிதி கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார். உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான நிதியை குறைத்து இரண்டு வருட நிவாரணத் திட்டமாக இந்த இடைக்கால வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும் எனவும் நெருக்கடியைச் சமாளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் போது பணவீக்ககம் அதிகரிக்கும் என்றும், இதனால் போராட்டங்கள் இன்னும் அதிகரிக்கலாம்.

எதிர்வரும் மாதங்களில் வருடாந்த பண வீக்கம் 40% ஐ தாண்டும் என்றும் இது ஏற்கனவே அதிக விலைகள் காரணமாக இன்னல்களை அனுபவிக்கும் குடும்பங்களுக்கு மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-6)

# கொழும்பு துறைமுகத்தில் சிக்கியுள்ள சுமார் 500 கொள்கலன்கள்

(கொழும்பு)

அரிசி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய சுமார் 500 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் சிக்கியுள்ளன என அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களை திறந்த கணக்கு முறையின் ஊடாக இறக்குமதி செய்ய அனுமதிக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகவும் இறக்குமதிக்கு கட்டுப்பாடுகளை விதிப்பது பாரிய பிரச்சினைகளுக்கு வழிவகுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

திறந்த கணக்கு முறைக்கு உணவினை இறக்குமதி செய்வது கடந்த 6 ஆம் திகதி முதல் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# 71 தடவைகள்

## பிரதமர் பதவியை நிராகரித்தேன்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

71 தடவைகள், தான் பிரதமர் பதவியை நிராகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

52 நாட்கள் சதி அரசாங்கம் உள்ளிட்ட ஜனநாயக நெறிமுறைகளுக்கு முரணான அனைத்து சம்பவங்களிலும் நான் உறுதியுடன் எதிர்த்துப் போராடியுள்ளேன். அதன் காரணமாக பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு எனக்கு எழுபத்தியொரு தடவைகள் அழைப்பு விடுக்கப்பட்டும் அதனை நான் நிராகரித்துள்ளேன்.

பதவிக்கு ஆசைப்பட்டு அரசியல் செய்வதைப் பார்க்கிலும் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்காக அரசியல் செய்வதையே நான் விரும்புகின்றேன் என்றும் சஜித் பிரேமதாஸ தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 350 |
| தக்காளி | 800 | 850 | 800 | 900 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 120 | 120 |
| கோவா | 230 | 200 | 240 | 250 |
| கரட் | 180 | 320 | 340 | 350 |
| பூசணி | 120 | 120 | 100 | 120 |
| புடோல் | 230 | 220 | 220 | 250 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 180 | 200 |
| பாகற்காய் | 650 | 650 | 800 | 600 |
| வெண்டக்காய் | 160 | 150 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 200 | 300 | 200 | 150 |
| லீக்ஸ் | 200 | 230 | 240 | 250 |
| பீற்றூட் | 350 | 350 | — | 400 |
| கறிமிளகாய் | 400 | 450 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1200 | 1800 | 1400 | 1400 |
| போஞ்சி | 450 | 600 | 800 | 500 |
| கத்தரிதம்புள்ள | 280 | 150 | — | 320 |
| கீரை - 1 பிடி | 50 | 70 | 150 | 150 |
| தேசிக்காய் | 600 | 500 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 40-60 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 300 | 180 | 140 |
| வெங்காயப்பூ | — | — | — | — |
| முள்ளங்கி | 120 | 180 | — | 250 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | — | — | — |

# அரசியல்வாதிகளின் வீடுகளில் உரமூடைகள் விசாரணைக்கு உத்தரவிட்ட விவசாய அமைச்சர்

(கொழும்பு)

அரசியல்வாதிகளின் வீடுகளில் காணப்பட்ட யூரியா உர மூடைகள் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு தேசிய உர செயலகத்திற்கு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

விவசாயிகளுக்கு இரசாயன உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் சில அரசியல்வாதிகள் தமது வீடுகளில் உரங்களை சேமித்து வைத்திருந்தமை தமக்கு ஆச்சரியத்தை அளிப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த இரசாயன உரங்கள் விவசாயிகளுக்கு மானியமாக வழங்கப்படவுள்ளதா? அல்லது உரிய அரசியல்வாதிகளால் தனியார் வர்த்தகர்களிடம் நிலவும் விலைக்கு உரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதா? என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அறிக்கை கிடைத்த பின்னர், இது தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை வெளியிட அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பல அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீ வைத்த போது அவர்களின் பல வீடுகளில் நூற்றுக் கணக்கான உரமூடைகள் காணப்பட்டதாக ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## குமரனின் கனவு

குமரன் ஒரு கிராமத்தின் வாலிபன்.. ஆடு, மாடுகளை மேய்ப்பவன், நல்ல தைரியசாலி. அதனால் அவன் எப்போதும் தான் ராஜாவாகிப் போர் புரிவது போல எண்ணிக் கொண்டே இருப்பான்.

ஒரு நாள் குமரன் ஆடு, மாடுகளை மேய விட்டு விட்டு ஒரு மரத்தடியே படுத்தான். அவனுக்குத் தூக்கம் வந்தது. அப்போது ஒரு கனாக் கண்டான். அதில் அவன் ஒரு மலை மீதேறி அங்கு உச்சியில் ஒரு சிம்மாசனத்தைக் கண்டு அதில் உட்கார்ந்து கொண்டான். அவனருகே ராணியின் வேடத்தில் ஒரு பெண் உட்கார்ந்தாள். அவள் தலையில் கிரீடமும் இருந்தது. அவன் "ராஜாவாகி விட்டேன்" என்று கத்திக் கொண்டே கண் விழித்தான். அப்போது சிம்மாசனமோ, ராணியோ இல்லாதது கண்டு தான் கண்டது கனவே என்பது அவனுக்குத் தெரிந்தது. இதுபோல மறு நாளும் அவன் ஆடு, மாடுகளை மேயவிட்டு மரத்தடியே படுத்துத் தூங்கிய போது முன் தினம் கண்ட அதே கனவைக் கண்டான்.

மூன்றாவது நாளிலும் அவன் மாடுகளை மேய விட்டுவிட்டு படுத்துத் தூங்குகையில் முன் தினம் கண்ட கனவையே மறுபடியும் கண்டான். மூன்று நாட்களிலும் ஒரே கனவைக் கண்டதால் அவன் மனம் தான் கண்டிப்பாக ராஜாவாகி விடப்போவதாக உறுதியாக நம்பியது. நான்காவது நாள் அவன் மாடுகளை மலைப்பகுதியில் மேய விட்டுவிட்டு மலையின் உச்சிக்குப் போய்ப் பார்த்தான். ஆனால் அங்கு சிம்மாசனமோ ராணியோ இருக்கவில்லை. ஆனால் சற்று தூரத்திலுள்ள மாணிக்கபுரி தான் அவன் கண்களுக்குத் தெரிந்தது.

அவன் ஆடு,மாடுகளை ஊரில் விட்டு விட்டு மறுநாள் காலையில் மாணிக்கபுரிக்குக் கிளம்பினான். வெகு தூரம் நடந்த பின் பசி எடுக்கவே ஏதாவது ஊர் தென்பட்டால் அங்கு போய் சாப்பிடலாம் என நினைத்தான். ஆனால் அந்தக் காட்டுப்பாதையில் ஒரு சிறு கிராமம் கூடத் தென்படவில்லை. மேலும், இருட்டியும் விட்டது.

அவன் அன்றிரவை ஒரு மரத்தடியில் படுத்துக் கழிக்க நினைத்து ஒரு மரத்தடியே படுத்தான். அப்போது சற்றுத் தூரத்தில் குதிரைகள் வந்து நிற்கும் ஒலியையும் இருவர் பேசுவதையும் அவன் கேட்டான். அவர்கள் சற்றுத் தூரத்திலுள்ள பாழடைந்த ஒரு வீட்டிற்குப் போகப் போவது அவர்களது பேச்சிலிருந்து தெரிந்தது. அவன் அவர்கள் புறப்பட்ட போது அவர்களுக்குத் தெரியாமல் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றான். அது ஒரு பாழடைந்த இடம். அது திருடர்களின் மறைவிடம் என்று அவனுக்கு விளங்கி விட்டது. அதனால் அவன் யாரும் பார்க்காத ஒரு இடத்தில் மறைந்து கொண்டு மற்றவர்கள் என்ன செய்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்கலானான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## சுந்தர காண்டம்




"எழில் கொஞ்சும் நகரைப் படைத்த நாளில் நான்முகன் என்னைக் காவலுக்கு வைத்தான்; அவன் ஏவலுக்குப்பணிந்து உன்னை எதிர்த்து நின்றேன்; அஞ்சனை மகனே! உன் அங்கை பட்டதும் என் கடமையை முடித்துக் கொண்டேன்; கொடுமை நீங்கி அறம் தழைக்கும்; இனித் தீமைகள் ஒழியும் காலம் அணுகி விட்டது. இச் சித்திர நகர், இனிச் சிதைவடையும்" என்று கூறி வழி விட்டு, விடுதலை பெற்றாள்.

**ஊர் தேடுதல்**

பெண்ணை ஒதுக்கி வாழ்ந்தவன், பெண்ணைத் தேடும் பணியில் அமர்ந்தான். இது ஒரு புதுமையாய் இருந்தது. இராமன் உரைத்த அடையாளம் அவனுக்கு வரைபடமாய் விளங்கியது. சீதை என்னும் கோதை, எழில் மிகு ஓவியமாய் அவன் மனத்தில் பதிந்திருந்தாள். வழியில் காணும் பெண்களை அவன் விழிகள் சந்தித்தன. அழகு என்பதற்கு அடையாளம் எதுவும் அவன் கண்ணில் படவில்லை. அரக்கியர் இடையே அணங்கனைய மகளாகிய சீதையைக் காண முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. தப்பித்தவறி நங்கையர் இளமையோடும் எழிலோடும் தென்பட்டால் தான் எழுதி வைத்த சித்திரம் கொண்டு அவர்களை விசித்திரமாய்ப்பார்த்து வந்தான்.

**உறங்குகின்ற கும்பகர்ணன்**

அனுமன் பார்வை கும்பகர்ணன் மாளிகைப்பக்கம் சென்றது. மலை ஒன்று உருண்டு கிடப்பதைப் பார்த்தான்; அதன் தோற்றத்தைக் கண்டு வியந்தான்; பேருருவம் படைத்த அது நின்றால் எப்படி இருக்கும்? என்று நினைத்தான். மலையின் உருவை அவன் உருவில் வைத்துப் பார்த்தான்; தின்பதற்கே பிறந்தவன் அவன், என்பதை அறிந்தான்.

ஊனும் கள்ளும் உண்ட பின் அவன் உறக்கம் கொண்டவனாய்க் காணப்பட்டான். அவன் குறட்டை விட்டுக்கொண்டு உறங்குவதைப் பார்த்தான். 'பேரரசன் ஒருவன் இப்படிப் பெருந்துயில் பெற்றிருக்க முடியாது' என்பதால் அவன் இராவணனாய் இருக்க முடியாது என்று தெளிந்தான்.

**வீடணன் இருக்கை**

அடுத்து அவன் இளவல் வீடணன் மாளிகையை அடைந்தான்; வனப்பும் அழகும் அந்த மாளிகை பெற்றிருந்தது; அங்கே அரக்க வடிவில் ஒரு அசோகனைக் கண்டான்; கறுப்பு நிறத்தில் வெள்ளை உள்ளம் குடிகொண்டிருப்பதைக் காண முடிந்தது; நீதியும் அறமும் அவனிடம் இடம் வேண்டிக் குடிகொண்டிருந்ததைக் காண முடிந்தது; 'பகை நடுவே உறவு கொள்ள ஒருவன் உளன்' என்பதை அறிந்தான்.

'இவன் தப்பிப் பிறந்தவன்' என்ற முடிவுக்கு வந்தான்; கும்பகர்ணன் தம்பி வீடணனாகத் தான் இருக்க வேண்டும் என்று அறிந்தான்; அவன் மீது இவன் கண்ணோட்டம் சென்றது; 'இவன் பயன்படக் கூடியவன்' என்று மதிப்பீடு செய்து கொண்டான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## புலம்பெயர் தமிழ் உறவுகள் தயாராக இருக்க வேண்டும்

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அடுத்து வரும் மாதங்கள் மிக மோசமானதாக இருக்கும் என்பதைப் பலரும் எதிர்வு கூறிவருகின்றனர்.

எனினும் நம்மைப் பொறுத்தவரை அடுத்து வரும் மாதங்கள் மட்டுமல்ல, அடுத்துவரும் ஆண்டுகள்கூட மோசமானதாகவே இருக்கப் போகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், உலக நாடுகள் எவ்வளவுதான் உதவிகளை வழங்கினாலும் இந்நிலைமையைச் சமாளிக்க முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

இந்த நிலையில், ஏழை மக்களின் நாளாந்தச் சீவியம் என்பது கேள்விக்குறியாகிறது.

ஆம், நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் எகிறிக் கொள்வதால், அவற்றைக் கொள்வனவு செய்ய முடியாத திண்டாட்டத்தில் மக்கள் உள்ளனர்.

இதுதவிர, எரிபொருளுக்கும் எரிவாயுவுக்குமான காத்திருப்புகள் நாளாந்தத் தொழில் முயற்சிகளைக் கடுமையாகப் பாதிக்கின்றபோது, அன்றாடம் உழைத்துச் சீவியம் நடத்துகின்றவர்களின் நிலைமை எவ்வாறாக இருக்குமென்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இரா்து.

ஆக, எந்தவகையிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது மக்களைப் பசி, பஞ்சம், பட்டினி என்ற கோரப் பிடிக்குள் ஆட்கொள்ளப் போகிறது.

இதை நாம் கூறும்போது, இது தமிழ் மக்களுக்கு மட்டும் நடக்கப் போகிறதா? என்றால் இல்லை.

மாறாகப் பொருளாதார நெருக்கடி காரணமாக சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்து இன மக்களும் கடுமையாகப் பாதிப்படையப் போகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், எங்களுக்கு மட்டும் உதவுங்கள் எனக் கேட்பது நியாயமாகாது.

அதேநேரம் இன, மத, மொழி சார்ந்து உதவுவதும் தர்மமாகாது.

ஆகவே மக்களுக்கான உதவியை யார் வழங்க முன்வந்தாலும் அந்த உதவியை இன, மத, மொழி பேதங்களால் வகைப்படுத்தி விடக்கூடாது என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

இவற்றை நாம் கூறும்போது அது சரி, இலங்கை மக்களுக்கு உதவ யார் உளர் என்று நீங்கள் முணுமுணுப்பது நமக்குத் தெரிகிறது.

இங்குதான் எங்கள் புலம்பெயர் தமிழ் மக்கள் இலங்கை மக்களுக்கு உதவக்கூடியதான அழைப்பு விடுக்கப்படும் நேரம் நெருங்குகிறது என்ற செய்தியைக் கூறவேண்டியுள்ளது.

ஆம், இலங்கையின் எதிர்காலம் நிச்சயம் கந்தறு நிலைக்கு வந்தாகும்.

இந்தக் கட்டத்தில்; புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழ் மக்கள் தங்களின் மனிதாபிமான உதவிகளை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை இலங்கையில் இருந்து விடுக்கப்படும்.

இவ்வாறு விடுக்கப்படுகின்ற கோரிக்கை முதலீடு சார்ந்தது அல்ல. மாறாக தமிழகத்துச் சகோதரர்கள் மனிதாபிமான அடிப்படையில் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைத்ததுபோல, வெளிநாட்டில் இருக்கக் கூடிய நம் தமிழ் உறவுகளிடம் உதவிகள் கேட்கப்படும்.

இதன்போது இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகளை வழங்க புலம்பெயர் தமிழ் மக்கள் தயாராக வேண்டும்.

## யாழில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 106,420 குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுமென யாழ். மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வருமானம் குறைந்த மக்களுக்கு தற்பொழுது வழங்கப்படுகின்ற தொகையை விட மேலதிகமான தொகையைச் சேர்த்து தலா 5 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

அவ்வாறு நடைமுறைப்படுத்தும் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் 78,442 சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கும் 27,978 வறிய குடும்பங்களுமென மொத்தமாக 106,420 குடும்பங்கள் அந்த நன்மையைப் பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை சமுர்த்தி திணைக்களம் துரிதமாக மேற்கொண்டு வருகின்ற நிலையில் அந்த நிதி கிடைத்தவுடன் மே மற்றும் யூன் மாதங்களில் அந்தக் கொடுப்பனவு கிடைக்கும் என்றார். (ம-7,33)

## சாதாரண தர பரீட்சை நிறைவடைந்த பின் சேவையில் இருந்து விலகுவோம்

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவிப்பு

க.பொ.த சாதாரண தர பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் பேருந்து சேவையில் இருந்து விலகுவதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊழியர்கள் பேருந்துகளுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக கப்பம் கோருவதால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பஸ் ஒன்றுக்கு 100 லீற்றர் எரிபொருள் வழங்குவதற்கு 1,000 ரூபாய் கப்பம் கோருவதாக அவர் தெரிவித்தார்.

அதன்படி, முறையாக டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் சாதாரண தர பரீட்சைக்கு பின்னர் பேருந்து சேவையில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ம-7)

## எரிபொருள் பற்றாக்குறையால் கட்டுநாயக்க உட்பட அனைத்து விமான நிலையங்களும் மூடப்படலாம்?

(கொழும்பு)

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு பின்னர் கட்டுநாயக்க உட்பட அனைத்து விமான நிலையங்களும் மூடப்படும் அபாயம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் பற்றாக்குறையே இதற்கு காரணம் என விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்ற போதும் இதனை அதிகாரிகள் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இம் மாதம் 31ஆம் திகதி வரை மட்டுமே விமானங்களுக்கு தேவையான எரிபொருள் இருப்பதாக விமான நிலைய மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தரையிறக்கப்பட்ட பல விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக சென்னைக்கு திரும்பியுள்ளதாகவும் விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## யாழில் கடந்த 20 நாட்களாக 16 இலட்சம் லீட்டர் பெற்றோல் விநியோகம்

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், ஒக்டேன்- 92 பெற்றோல் 16 இலட்சத்து 10ஆயிரத்து 400 லீட்டர் விநியோகிக்கப்பட்டுள்ளது .என யாழ்.மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

அதேவேளை இக் காலப் பகுதியில் டீசல் 8 இலட்சத்து 81 ஆயிரத்து 100 லீட்டரும் மண்ணெண்ணெய் 4 இலட்சத்து 48 ஆயிரத்து 800 லீற்றரும் சூப்பர் டீசல் ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 400 லீட்டரும் விநியோகிக்கப்பட்டுள்ளது. பெற்றோல் ஒக்டேன் 95 அக் கால பகுதியில் விநியோகிக்கப்படவில்லை.

அதேவேளை 14ஆம் திகதிக்கு பின்னர் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு கிடைக்கப்பெறவில்லை.

அத்துடன் பெற்றோல் கடந்த 14ஆம் திகதி அதிக பட்சமாக ஒரே நாளில் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 200 லீட்டர் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், 20ஆம் திகதியும் ஒரு இலட்சத்து 65 லீட்டர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். (ம-7,33)

## சத்திய தரிசனம்



### சத்தியம்

- 2014 ஜனவரி மாத காலப்பகுதிக்குள் ஒருநாள் நான் சுவாமியிடம் அதிகமாக அழுது புலம்பினேன். அது என்னவென்றால் இந்த உலகத்தில் சுவாமி உங்களை விட்டால் எனக்கு வேறு யாருமில்லை என்று எனது வாயால் கூறியபோது: நமது சுவாமி எனது வாயால் எனக்கு உன்னை விட்டால் எனக்கு ஆள் இல்லை என்று கூறிவிட்டார். சுவாமி கூறிய வார்த்தையில் இந்த வசன அமைப்பில் எழுதுகின்றேன். கேட்டீர்களா சாயி சகோதர சகோதரிகளே நமது சுவாமியை இந்த உலகம் எல்லாம் முயற்சி செய்தாலும் நமது சுவாமி பற்றிய மர்மத்தை அறிய முடியுமா? அது நடக்காத காரியம் அல்லவா.
- நமது சுவாமி 1008 நாளாந்த சிந்தனை ஒன்றினை கூறுகிறார். என்னவென்றால் நமது சுவாமியைப் போல் வாழ்க்கை நடத்துபவர்கள் மட்டுமே அவரது மர்மத்தை குறிப்பிட்டளவு அறிந்து கொள்ள முடியும் என்று கூறுகிறார்.
- எனது பிராத்தனைகள் தினமும் நான் சுவாமியைப் போல் வாழ்க்கை நடாத்தி முடிக்க விரும்புகின்றேன் என்று நமது சுவாமியிடம் அடிக்கடி கூறுவேன். எனது வாழ்வின் இலக்கு பிறக்காத வாழ்கின்றேன். ஏனெனில் நான் கிராமப் பகுதியைச் சேர்ந்தவன் என்ற காரணத்தினாலும் மற்றும் நமது சுவாமியின் கருணையால் இந்த துன்பங்கள் 40 வருட காலப் பகுதியில் அனுபவித்த காரணத்தினாலும் என்று உறுதிபடக் கூறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்

# திரு.வீரகத்தி கருணலிங்கம்

## அவர்களின் மணிவிழா மலர் - 26.05.2022

### Message from the Chief Commissioner Teacher Education

Really I am overwhelmed to send this message of felicitation to mark the 60th birthday celebration of Mr.V.Karunalingam, the Principal of Kopay Teachers' College. I am aware that Mr.V.Karunalingam shows keen interest on "Quality Education through Quality Teachers' He has been contributing a lot in producing efficient and competent teachers through his sincere and dedicated work which created a strong reputation among the teacher trainees. He is indeed a capable leader to administer the Teachers' college at the same time he has maintained a good rapport with the staff as well as the trainees. Because of his versatile personality-as a choreographer and actor to "Naaddu Kooththu", singer, cricket player, artist, writer etc, he holds the place of each and everyone's heart. Moreover he is reputed author of many books. His writings on education is very helpful to the students of BEd, and MEd. He is excellent in training the trainees to make use of the dramati.

**B.G.I.Kalani Hemalie**
**Chief Commissioner Teacher Education**
**Ministry of Education, Isureupaya.**

### அகவை அறுபது காணும் அதிபரை வாழ்த்துகிறேன்

நயினை மண்ணில் பிறந்து அங்கேயே கல்வி பயின்று யாழ்ப்பாணத்தில் மேற்கல்வி தொடர்ந்து கல்விப்பணியில் பல மைல் கற்களைத் தாண்டிய திரு.வீரகத்தி கருணலிங்கம் - அதிபர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை அவர்களை மனமார வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியராக கல்விப் பணியை ஆரம்பித்து ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்று, பின்னர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராக இணைந்து இங்கு ஏறத்தாழ 20 வருடங்கள் பணியாற்றியமை சாதனையாகப் பார்க்கப்பட வேண்டியதாகும். இங்கு கற்பிக்கும் காலத்தில் 2009 ஆம் ஆண்டு முதல் இலங்கை கல்வியியலாளர் சேவையில் தெரிவாகி 2015 முதல் அதிபராக கலாசாலை விழுமியங்களை கட்டிக் காத்த செயற்றிறன்கள், ஆளுமைகள் மெச்சுதற்குரியன.

தாம் தாண்டி வந்த படிக்கற்களை அனுபவக்கல்வியாகக் கொண்டு மென்றிறன்கள் மூலமான அணுகுமுறையை கடைப்பிடித்து அனைவருடனும் நட்புறவுடன் உறவாடி காரியங்களை நிறைவேற்றும் வல்லமை இவருக்கு கை வந்த கலை.

வரலாற்று சிறப்புமிக்க கோப்பாய் ஆசிரிய கலாசாலை நூற்றாண்டு விழாக் காண இருக்கும் வேளையில் மணி விழாக் காணும் இம் மாண்பினரை மனநிறைவுடன் வாழ்த்துகிறேன். கலாசாலையின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அக்கறை கொண்டு, கல்வியமைச்சு மட்டத்தில் நற்பெயர் நீடிக்க உழைக்கும் பண்பு போற்றுதற்குரியது.

யான் பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய மாணவனாகவும் விரிவுரையாளராகவும் இருந்த காலம் முதல் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்ற வேளைகளில் சகோதரர் கருணலிங்கம் அவர்களின் பல நற்பண்புகள் மனிதாபிமான உணர்வுகளைக் கண்டு வியந்துள்ளேன். ஒரு சிறந்த சித்திரக் கலைஞர், கூத்துக் கலைஞர், அண்ணாவியார் இவற்றுக்கப்பால் முன்மாதிரியான கல்வியியலாளர். அவர் தம் மணிவிழாவில் நீண்ட ஆயுளோடு நல்ல ஆரோக்கியத்தோடு மகிழ்வாக வாழ மனமார வாழ்த்தி அமைகிறேன்.

**திரு. தி. ஜோண் குயின்ரஸ்**
**மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்**
**வடமாகாணம்.**


### பணி சிறக்க மணிவிழா வாழ்த்துக்கள்

தமிழ் கூறும் நல்லுலகின் தனிச்சிறப்பு வாய்ந்த ஆசிரியர் தொழிற்கூடம் , ஆசிரியர் கலாசாலை தன்னிகரற்ற கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அத்தகையதொரு கலைக்கூடத்தின் அதிபராக இருந்து ஆசிரியர்களை பயிற்றுவித்து ஆசிரிய தொழில் வான்மை யாளர்களாக உருவாக்கும் ஒரு பெரும் கைங்கரியத்தில் 7 வருடங்களாக ஆளுமையுடன் பணியாற்றி அகவை அறுவதை அடைந்து மணிவிழா காணும் அன்பர், நண்பர் வீரகத்தி கருணலிங்கம் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துக்கள் முதற்கண்.

தன்னலம் கருதாத தயாள குணமும் அர்ப்பணிப்புமிக்க செயற்றிறனும் ஆர்வமும் கொண்ட இவர் கலாசாலை பௌதிக வளங்கள், மனித வளங்கள் என அனைத்தையும் உச்ச அணி ஆளுமையுடன் பயன்படுத்தி இன்று இக்கலாசாலை பொலிவுடன் விளங்க காரணமாயினார். அது மட்டுமல்லாது இன்று பயிற்சி பெறும் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் இவரால் மிகவும் அவதானிக்கப்பட்டு அவர்களுக்குரிய கல்விசார் தேவைகள் சீராக வழுங்கப்பட்டு சமூகத்தின் நல்லிருப்புக்கு உச்ச அளவில் மனமுவந்து பணியாற்றும் நல் ஆசிரியர்களாக புடமிடப்பட்டு பயிற்றுவிக்கப்படுவது இவரின் சிறப்பு எனக் கூறலாம்.

தொடர்ந்து கல்விப்பணி செய்ய என்றும் எனது வாழ்த்துக்கள். வாழ்க வளமுடன் நலமுடன் பல்லாண்டு.

**திரு.முத்து இராதாகிருஷ்ணன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**யாழ். கல்வி வலயம்.**



**Mr.Veerakathy Karunalingam**
Principal
Art (Special Trained)
B.A, PGDE merit, MEd, PGDEM-merit
SLTES
Kopay Teachers' Training College

**Service Paticulars**

J.Pungudutivu Rajarajeswary Vidyalayam
27.11.1989 - 04.04.1991
Trainee Kopay Teachers' Traning College
05.04.1991 - 31.12.1992
J/Pungudutivu Maha vidyalayam
01.01.1993 - 31.04.1993
J/Vidaththatpalai Kamalasiny Vidyalayam
attach J/Pungudutivu Shanmugananthan Vid.
01.05.1993 - 31.12.1994
J/Pungudutivu Maha Vidyalayam
01.01.1995 - 18.11.1998
Island Zone Inservice Advisor
19.11.1999 - 28.10.2001
Kopay Teaching Training College Lecturer
29.10.2001 - 13.08.2014
Kopay Teachers' Training college Principal
14.08.2014 - Up to date

(11608)

### வாழ்த்துச் செய்தி

நயினை மண்ணின் புதல்வனான திரு.வீரகத்தி கருணலிங்கம் உழைப்பினாலும், அறிவினாலும் படிப்படியாக உயர்ந்த உத்தமர். கடந்த 20 வருடங்களாக கோ.ஆ.க. விரிவுரையாளராக கடமையாற்றிய இவர் கடந்த 8 ஆண்டுகளாக குறித்த கலாசாலையில் அதிபராக கடமையாற்றுகின்றார்.

ஆசிரிய சேவையில் இணைந்து ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் உயர்ந்து இன்று ஆசிரிய கலாசாலையின் அதிபராக பணியாற்றுகின்றார்.

நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள், நல்ல குடும்பம், தெய்வீகம் என்பன அமையப் பெற்றமை அவரது தூய வாழ்வுக்கு எடுத்துக் காட்டாகும்.

சித்திரபாட ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் கலைமாணி, முதுகல்விமாணி பட்டங்களையும் பெற்றுள்ளார். தீவக வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகவும் கடமையாற்றி உள்ளார். நாட்டுக்கூத்து அண்ணாவியரும், கலைஞரும் ஆகிய இவர் சித்திர பாடத்திற்கும் கல்வியியலுக்கும் நூல்களை எழுதியுள்ளார்.

சமகாலத்தில் தொடர்ந்து பணியாற்றும் இவரது மணிவிழா பத்திரிகை அனுபந்தத்திற்கு வாழ்த்து தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதோடு அவரது எதிர்கால வாழ்க்கை மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன்.

**பண்டிதர், கலாநிதி.செ.திருநாவுக்கரசு**
**(ஓய்வுநிலை பிரதி அதிபர்)**
**ஆசிரியர் கலாசாலை கோப்பாய்.**

### வாழ்த்துச் செய்தி

ஈழமணித்திருநாட்டின் நயினைப்பகுதியிலே அறிஞர்களும் , செல்வர்களும், சான்றோர்களும் வாழும் புண்ணிய பூமியிலே பிறந்து கல்விச்சேவையாற்றி வரும் கருணலிங்கம் அவர்களின் மணி விழாவில் வாழ்த்துக் கூறுவதில் பெருமையடைகிறேன்.

பெயருக்கு ஏற்றது போன்று கருணையுள்ளம் படைத்த அவர் அன்பான, அடக்கமான, அமைதியான, நற்குணங்கள் வாய்க்கப் பெற்றவர். தனக்குக் கிடைத்த கல்வியின் மூலம் சமூகத்தை வாழ வைத்த பெருந்தகை. அவருடைய கல்விப்பணி அளவிட முடியாதது. எல்லோருடனும் மரியாதையாகவும் அன்பாகவும் பழகும் இனிய சுபாவமுடையவர். பல ஆசிரியர்களை உருவாக்கி எமது சமூகத்திற்குப் பெரும் பணியாற்றியவர்.

எமது சமூகத்தில் பெருமைப்படக் கூடியளவில் அவரின் பணி வியாபித்து நிற்கிறது. அவ்வாறான கருணலிங்கம் அவர்களை இந்த மணிவிழா நாளில் வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

**கலாநிதி (திருமதி) ஜெயலக்குமி இராசநாயகம்**
**தலைவர்**
**கல்வியியற்றுறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் அதிபர், சிறந்த ஆன்மிகவாதி, பேச்சாளர், கலைஞன், நிர்வாகி என பல்திறனாளன் உயர்திரு. வீரகத்தி கருணலிங்கம் அவர்களது மணி விழாவிற்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சிறந்த தலைவனின் தலைமைத்துவத்திற்கு அவரின் பின் பற்றுகை மூலம் உருவாகிய ஆசிரியர்களே சாட்சியமாகின்றனர். ஆளுமைப்பண்புகள் ஆசிரியர்கள் மற்றும் மாணவ சந்ததிகளுக்குக் கடத்தப்படுகின்றன. நல்ல மனமும் உறுதியுமுடைய திரு.கருணலிங்கம் அவர்களின் சேவைக்கு சான்று பகர்ந்து நிற்பது அவரின் தலைமையிலும் வழிகாட்டலிலும் உருவாக்கப்பட்ட ஆசிரியர்களே.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கென உள்ள தனித்துவத்தை தக்க வைப்பதில் அவரின் அர்ப்பணிப்புமிக்க சேவை மதிக்கத்தக்கது. கடந்து மூன்று வருடங்களாக அவருடன் இணைந்து பணியாற்றும் சந்தர்ப்பங்களில் எல்லாம் அவருடைய தலைமைத்துவ அணுகுமுறைகளும், வேலைப்பகிர்வும் அவரின் பல்திறனாளுமையை வெளிப்படுத்தி நின்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

கல்வியில் சம வாய்ப்பும் உள்வாங்கலும், கல்வியின் பொருத்தப்பாடு, கல்வியின் பண்புத்தரம், வளப்பற்றாக்குறை மற்றும் கல்வியில் வகை கூறல் போன்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியுடன் இணைந்து செயற்பட அதிபர் திரு.வீ.கருணலிங்கம் அவர்கள் பலவழிகளிலும் உதவி புரிந்துள்ளார்.

"தாமின்புறுவது உலகின்புறக் கண்டு
காமுறுவார் கற்றறிந்தார்."

என்கின்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, சகல சிறப்புக்களையும் பெற்று, ஆசிரியர் கல்விக்கு பல சேவைகளை ஆற்றி, மாணவர் பரம்பரையை உருவாக்க வேண்டுமென்றும் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டுமென்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தின் சார்பில் வாழ்த்துகின்றேன்

**சுப்பிரமணியம் பரமானந்தம்,**
**பீடாதிபதி.**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

### வாழ்த்துச் செய்தி

பெயருக்கேற்றவாறு கருணையுள்ளம் கொண்ட இவர் சிறந்த சித்திரப்பட ஆசிரியர். யாழ்.மாவட்டத்தின் பல முன்னணிப் பாடசாலைகளில் கடமையாற்றி பாடசாலைகளின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையுடன் பல செயற்பாடுகளை நிறைவேற்றியதுடன் கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையின் விரிவுரையாளராக, உப அதிபராக, அதிபராக விளங்கியதுடன் ஆசிரிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பக்கபலமாக விளங்கி பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியவர். நாட்டின் இக்கட்டான காலகட்டத்தில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களின் கல்வி கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு புகலிடம் கொடுத்து, கல்வி செயற்பாடுகள் இடையூறின்றி நடைபெற பல வழிகளிலும் உறுதுணையாகச் செயற்பட்டவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் தற்போது இலங்கையிலும் வெளிநாட்டிலும் பல உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராகிய இவர் பல நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றியவர். கல்விப்புலத்தில் அரிய சேவையாற்றிய இப் பெருமகனாருக்கு மணிவிழா எடுக்கும் விழாக்குழுவினருக்கு எனது பாராட்டுக்கள்.

**லயன் Dr வை. தியாகராசா**

### அர்ப்பணிப்புக் கொண்ட சிறந்த கல்வியியலாளர்

புகழ் பூத்த கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் தெய்வீகச் சிந்தனைகளோடு கற்றவருக்குச் சிறந்த உதாரணப் புருஷராக புகழ் பரப்பி நிற்கின்ற திருவாளர் வீ. கருணலிங்கம் அவர்களது கலாசாலை அதிபர் பணி மேலோங்கிடும் இந்த வேளையில் அவரது மணிவிழாச் செய்தி இடையிட்டுப்புகுந்து எம்மை புளகாங்கிதம் அடையச் செய்கிறது.

பல்வேறு குணாதிசயங்கள் கொண்ட ஆசிரிய மணிகளை நல்வழிப்படுத்தக்கூடிய ஆசிரிய இலட்சணங்களை அணையாத ஒளிவிளக்காக ஒளிரச்செய்யும் பணியில் சிறப்பான வெற்றி கொண்ட அதிபர் கருணலிங்கம் தமது பன்முக ஆளுமையின் சிறப்பில் நானும் ஓர் பங்காளியாக உள்ளேன் என நினைத்து அளவில்லா ஆனந்தமடைகின்றேன்.

நான் அறிந்த வரையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பணியாற்றிய அதிபர்கள் வரிசையில் திரு.வீ.கருணலிங்கம் அவர்களது சேவைக்காலம் அதிகமானதாக உள்ளது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அதிகூடிய ஆசிரிய மாணவர்கள், விரிவுரைப்பணியில் பங்கேற்கும் கல்வியியலாளர்கள் எண்ணிக்கை, புதிய கட்டட அமைப்பு, கல்விப்புலம் சாரா உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை , பயிற்சி வளம் போன்ற பல்வேறு விடயங்களில் முதன்மையான இக்கலாசாலை தொடர்ந்தும் மேலோங்கி நல் ஆசிரியப் பரம்பரை பூத்துக் குலுங்க சிறந்த ஆற்றல் கொண்ட கருணலிங்கம் அவர்களது நற் சேவை எவ்வித இடையூறுகளுமின்றி ஓங்கி ஒலிக்க வாழ்த்துகின்றேன்.

**வே.கா.கணபதிப்பிள்ளை**
**முன்னாள் அதிபர்**
**கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிவாயு...

கிலோகிராம், 5 கிலோகிராம் மற்றும் 2,3 கிலோகிராம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதற்காக வரிசைகளில் நிற்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, கடந்த மூன்று நாட்கள் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## யாழில்...

தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழில் கடந்த சில தினங்களாக எரிவாயு விநியோகத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு இருந்தன. இந்நிலையில் விநியோக நடவடிக்கைகளை குழப்பம் இன்றி மேற்கொள்வதற்காக நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

எரிவாயு சிலிண்டர் விநியோக நடவடிக்கையில் பல நடைமுறைச் சிக்கல்கள் உண்டு. அவை தொடர்பாக கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம். கலந்துரையாடல்களின் முடிவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எரிவாயு சிலிண்டர் விநியோகத்தை குழப்பம் இன்றி முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, எரிவாயு சிலிண்டர் விநியோகத்தைக் குழப்பம் இன்றி முன்னெடுக்க அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சிலர் கறுப்புச் சந்தைகளில் அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்வதாக எமக்குப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ம-7,18,33)

## நிதி அமைச்சு...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார்.

இதற்கமைய இலங்கையின் 23 ஆவது நிதியமைச்சராக ரணில் விக்கிரமசிங்க தெரிவாகியுள்ளார்.

அத்துடன் நிதியமைச்சராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (ம-7)

## கடன்சுமை...

தாக புதிய புள்ளிவிபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மத்திய வங்கியின் 2021 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கடன் அதிகரிப்பு காரணமாக 2021ஆம் ஆண்டின் இறுதிக்குள் தனிநபர் கடன் சுமை 882,150 ரூபாயாக அதிகரித்துள்ளது. (ம-7)

## மருந்து...

னால் நன்கொடையாக வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த மருந்து வகைகளின் பெறுமதி 200 மில்லியன் இலங்கை ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அண்மையில் மருந்து மற்றும் உணவு வகைகள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பற்றாக்குறை...

மருந்துப் பற்றாக்குறைக்கு குறுகிய கால மற்றும் நடுத்தர கால தீர்வுகள் குறித்து கலந்துரையாட பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு கிடைத்த 200 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருந்துப் பொருட்களுக்கான கொடுப்பனவை இலங்கை ரூபாவில் செலுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்நோக்கும் டொலர் பற்றாக்குறை தொடர்பில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் விளைவாக இந்த உடன்பாடு எட்டப்பட்டதாக விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பிரான்ஸ் அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகளின் இருப்பு காரணமாக நாட்டில் உள்ள அனைத்து அவசர சத்திரசிகிச்சை நிலையங்களையும் தொடர்ந்து 90 நாட்களுக்கு பராமரிக்க முடியும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இதன்போது தெரிவித்துள்ளார். (ம-7)

## நாட்டில்...

வேலை இழக்கும் அபாயம் உள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ வேண்டிய நிலை ஏற்படும் என்றும், ஒரு வாரத்திற்குப் போதுமான பொருட்களை வாங்குவதற்குக் கூட வருமானம் இல்லை என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையின் பொருளாதாரம் எப்போது மீண்டு வரும் என்று கூற முடியாது. நாட்டில் தற்போது உள்ள வெளிநாட்டு கையிருப்பு ஒரு வாரத்திற்கு போதுமானதாக இல்லை. இதன் காரணமாக அத்தியாவசிய பொருட்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## அவசியமான...

கடமைக்கு அழைப்பதற்கான பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துமாறும் நிறுவனத் தலைவர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள வளப்பற்றாக்குறையின் அடிப்படையில் அரச செலவீனங்களைக் குறைப்பதற்காக அரச நிறுவனங்களில் ஊழியர்கள் சேவைக்கு அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 4 முக்கிய விடயங்களின் கீழ் ஊழியர்களை அழைப்பதை குறைக்குமாறு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## நெரு...

தொடர்ந்து பேசிய அவர்,

"நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கு நேரடியான தீர்வுகளை நடைமுறைப்படுத்த தயாராக உள்ளோம். எங்களிடம் அதேற்கேற்ற திறமையான மற்றும் தகைமையுள்ள குழு உள்ளது.

பொருளாதாரமறுமலர்ச்சியை நடைமுறைப்படுத்துவதுடன், இந்நாட்டின் பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக இருக்கும் அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை யும் நாம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

எனவே, அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்நாட்டில் பொருளாதார சீர்திருத்தத்திற்கான அணுகல் எமக்கு தேவையாகவுள்ளது என்றார். (ம-7)

## நாட்டின்...

போது நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை முன்னெடுப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

அண்மையில் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்க முடிந்தமையையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்துள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், சர்வதேச நிதிக்கட்டமைப்புக்களின் நிதியுதவி உள்ளடங்கலாக நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சியை முன்னிறுத்திய திட்டங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடியதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## 10 அரசியல்...

சுதந்திர முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

சுயாதீன 10 கட்சிகளின் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு கொழும்பில் உள்ள கம்யூனிச கட்சி காரியாலயத்தில் இடம்பெற்றது.


இச்சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-7)































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோலிய அமைச்சருக்கு உண்டியல்
# ஒரு ரூபாய் நட்டத்தை ஈடுசெய்ய அநுராதபுர மக்கள் நடவடிக்கை



(கொழும்பு)

95 ரக பெற்றோல் மற்றும் சுப்பர் டீசலின் விலைகளை அதிகரிப்பது தொடர்பில் ஆராய்ந்த போது, அதன் மூலம் பலன் கிடைக்காது என்பது தெரியவந்துள்ளதாக பெற்றோலிய வளத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, ஒரு லீற்றர் பெற்றோலுக்கு இன்னமும் சுமார் ஒரு ரூபாய் நட்டம் ஏற்படுவதாக அமைச்சர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

அமைச்சரின் இந்த கூற்றுக்கு பதிலளிக்கும் வகையில், அநுராத புரத்தைச் சேர்ந்த சிலர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் ஒரு ரூபாய் நட்டத்தை ஈடு செய்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய, காஞ்சனவின் உண்டியல் என பெயர் பொறிக்கப்பட்ட உண்டியல் ஒன்றை எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கிய அவர்கள், நட்டம் ஏற்படுகின்ற ஒரு ரூபாயை உண்டியலில் போடுமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

கடனாளிகளாக விரும்பாதவர்கள் எரிபொருளை நிரப்பிக் கொண்டதன்பின்னர் ஒரு ரூபாயை உண்டியலில் போட்டுவிட்டுச் செல்லுமாறு மக்கள் தெரிவித்துள்ளனர்.

சேகரிக்கும் பணத்தை அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிற்கு காசுக் கட்டளை ஊடாக அநுராதபுரம் தபாலகத்தில் இருந்து அனுப்பி வைக்கவுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11614)

076 825 7716 (ஆகாஸ்)



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ( நிலப்பரப்பு )

- A32, A9 இணையும் பிரதான வீதியில் ( றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்
- A9 பிரதான வீதியில் இருந்து 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் மருந்தகங்கள் அமைப்பதற்கும் ( பாமசி )
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

(11609)

தரகர் தேவையில்லை

பார்வையிடும் நேரம்

காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை

077 814 7389, 077 241 7589 - ஜெயம்


# பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு இடமாற்றம் வழங்காதது ஏன்?
## விளக்கமளிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு நீதவான் உத்தரவு

(கொழும்பு)

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு இடமாற்றம் வழங்குமாறு சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனை இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பாக நீதிமன்றத்திற்கு விளக்கமளிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு நீதவான் நேற்று உத்தரவு பிறப்பித்தார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு இடமாற்றம் வழங்குமாறு கடந்த 23ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு சட்டமா அதிபர் எழுத்துமூலம் அறிவித்ததாக நேற்று நீதிமன்றத்தில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் அயேஷா ஜினசேன கூறினார்.

அலரிமாளிகையில் இருந்து ஜனாதிபதி மாளிகைவரை அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளமை தொடர்பாக கடந்த 8 ஆம் திகதி பொலிஸ்மா அதிபருக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேரணி காலிமுகத்திடலை கடக்கும்போது அமைதிக்கு குந்தகம் ஏற்படலாம் எனவும் அதனை தடுப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸ்மா அதிபர் எழுத்துமூலம் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு ஆலோசனை வழங்கியிருந்ததாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

இதுவரை பிரதிப் பொலிஸ்மா அதிபர் கைது செய்யப்படாமை தொடர்பாக போராட்டக்காரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்ன அதிருப்தி வெளியிட்டார். (ம-7)

# மரண அறிவித்தல்

## திருமதி தம்பிஐயா அருளம்மா

பிறப்பு 1935.04.27 இறப்பு 2022.05.24



யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி புகையிரத நிலைய வீதி, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிஐயா அருளம்மா 24.05.2022 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வேலுப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிஐயாவின் பாசமிகு மனைவியும் செபஸ்ரியாம்பிள்ளை, தனபாலசிங்கம் (சுவிஸ்), ரவிச்சந்திரன் (சுவிஸ்), சாந்தகுமாரி (லண்டன்), காலஞ்சென்றவர்களான சசீந்திரன் (பனா), றஞ்சினி, சரோஜாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசநாயகம் (மசு தங்கக உரிமையாளர்), காலஞ்சென்ற தெய்வேந்திரம் (முன்னாள் கமநல சேவை சாரதி, இலங்கை செஞ்சிலுவை சங்க சாரதி), மகாலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற சிரோன்மணி, நிர்மலா (சுவிஸ்), நளாயினி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் தயாநிதி (தயா), தயாளினி (தங்கா), தயாகரன் (ஜேர்மனி), சீலன் (கனடா), மயூரன் (கனடா), மதி (பிரான்ஸ்), ராகினி, தர்சினி, அர்ஜீன் (சுவிஸ்), அயரா (சுவிஸ்), மேனா (அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம்), ரஜிதா (லண்டன்), கனிதா (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கரைச்சி), சோபனன், மதுதனன் ஆகியோரின் பேர்த்தியும் முத்தம்மா (ஆனந்தபுரம்), காலஞ்சென்றவர்களான மனோன்மணி, மயில்வாகனம், சின்னம்மா ஆகியோரின் சகோதரியும் புவிதன், கவிதன், பவித்திரா, கீர்த்திகா, யதுர்சன் (கனடா), நிதர்ஷனா, கிருஷனா, கிருஷன், கிஷாயினா (ஜேர்மனி), கிருஷாயா (ஜேர்மனி), அஸ்விகா (UK), காசிக்கா (UK), சாரா, ஆதவ், ஹரி (கனடா), யதுஸ், அக்ஸை (கனடா), தர்சித் (கனடா), அகிஸ்ணவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.05.2022) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவருடைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிளிநொச்சி திருநகர் இந்து பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
கிளிநொச்சி. (11610)

இங்ஙனம்,
குடும்பத்தினர்


New SCIENCE UNIVERSE

2022 A/L பரீட்சையை இலக்காக கொண்டு நடாத்தப்படும் முழுமையான கருத்தரங்கு

A/L CHEMISTRY & PHYSICS SEMINAR

Chemistry 15 days | 1 Day 4 Hours 500/= only | Physics 15 days

(11613)

Starting from : 27th May 1.p.m to 5.30p.m

1st Day Full theary 3 days

PHYSICAL CHEMISTRY

LOGA Director

No:52, Stanly Road, Jaffna

076 3220916



பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

(C-4360)

- பயிற்சிக்கால கைக்கொடுப்பனவு -30,000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777



**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு

நிலப்பரப்பு

- 1½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்
  01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
  02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
  03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.

(11612)

பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

077 623 4204, 077 288 0152, 076 658 3621


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.